எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-




# போதுமானவரே!


மலர்: 19 | Volume: 19 ஏப்ரல் 2024 | April 2024 இதழ்: 12 | Issue: 12













மோகன் சி.லாசரஸ் அவர்களால் நமது ஒடிசா மாநில இராயகடா பணித்தளத்தில் கட்டப்பட்ட ஆலயம் (16.03.2024) ஜெகன்நாத் சாராகா M.L.A., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



# உங்கள் சகோதரனிடமிருந்து...



இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.

பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தருக்குள் சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த மாதத்திலும் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த மாதத்திலே கண்ணின் மணிபோல பாதுகாத்த தேவன் இந்த மாதத்திலும் அதிசயமாக நடத்துவார். நீங்கள் எந்த காரியத்தைக் குறித்தாகிலும் எப்பொழுது ஜெபம் பண்ணினாலும் விசுவாசத்தோடு ஜெபம் பண்ணுங்கள் அப்பொழுது தேவன் அற்புதம் செய்வதைக் காண்பீர்கள். நம்முடைய தேசத்திலே நடைபெறப் போகும் தேர்தல் மூலமாக சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உண்டாக கருத்தாக ஜெபித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் நம்முடைய தேவனாகிய கர்த்தரே இராஜாக்களைத் தள்ளி இராஜாக்களை ஏற்படுத்த அதிகாரமுள்ளவர். இந்தத் தேர்தல் நம்முடைய தேசத்திற்கு நன்மையும் சமாதானமுமாய் காணப்பட ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள்.

நமது ஒடிசா மாநில பணித்தளத்திலே மாதந்தோறும் 500 புதிய கிராமங்களுக்கு சுவிசேஷம் என்ற முனைப்போடு தீவிரமாய் செயல்பட்டு வரும் மிஷனெரிகளை நினைத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுக்காக நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவ கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

**(T.ஆசீர் ஞானராஜ்)**

**24 மணி நேர ஜெப உதவிக்காக:**
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 96294 99532**
Email: calvarygospelmm@gmail.com

**வங்கியில் பணம் அனுப்புவோர்,**
**96294 99532**
**எண்ணில் தெரிவிக்கவும்**

Follow us youtube channel:
**Voice of Revival Media** (or)



# போதுமானவரே!

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். சங்.23:1,2**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, தாவீது இந்த வார்த்தையின் மூலமாக தன் உள்ளத்திலுள்ள வார்த்தைகளை ஜெபத்திலே பகிர்ந்து கொண்டதை நாம் பார்க்கிறோம்.

தாவீது ஆடு மேய்க்கிற அனுபவமுள்ளவனாய் இருந்தபடியினால் இந்த சங்கீதத்திலே ஒரு நல்ல மேய்ப்பனாக ஆண்டவரை பார்க்கிறான். ஒரு சில இடங்களில் தாயைப் போல, தகப்பனைப் போல, எஜமானாக உள்ளவரை இந்த இடத்தில் தாவீது மேய்ப்பராக பார்த்து, ஆண்டவரை துதித்த விதத்தை அவன் இருதயத்திற்குள் இருந்த விசுவாசத்தின் நிறைவை நாம் இந்த இடத்திலே பார்க்கிறோம். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். தாழ்ச்சி என்பதே என் வாழ்க்கையில் வரவே வராது. ஒரு வேளை உங்கள் குடும்பத்தை குறித்த பாரத்தோடும், துக்கத்தோடும் கூட இதை வாசித்துக்கொண்டிருக்கலாம். பிள்ளைகள் வாழ்க்கையைக் குறித்து கலக்கம் உங்கள் வாழ்க்கையில் இருக்கலாம். அல்லது உங்கள் வாழ்க்கையைக் குறித்து கலக்கம் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு இந்த சங்கீதம் நம்முடைய வாழ்க்கையில் நமக்கு சொந்தமாய் மாறப் போகிறது. நிச்சயமாகவே தாவீது பெற்ற அத்தனை ஆசீர்வாதங்களையும் தாவீதின் தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கும் கொடுக்கக் கூடியவராய்

*இருக்கிறார். நாம் தாவீதைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாய் இருக்கிறோம். தாவீதை விட கிருபை நிறைந்தவர்களாக தேவன் நம்மை நிறுத்தியிருக்கிறார். தாவீதை விட நாம் அதிக மேன்மையுள்ளவர்கள்.*

*பரியாசம், பாடுகள், நிந்தைகள் மத்தியில் ஆண்டவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் ஊழியத்தை செய்யும்படியாக வந்தேன். எந்த ஸ்தாபனமும் என்னை பொறுப்பெடுக்கவில்லை. தாங்குவேன் என்று வாக்குப்பண்ணினவர்களும் என்னை கண்டு கொள்ளவில்லை.*

**ஒரு நாள் நான் ஊழியத்திற்கு சென்று விட்டு வரும் போது மிகவும் பசி. அந்த நாட்களில் நான் அதிகமாக தண்ணீர் குடிக்காமல்தான் உபவாசம் இருப்பேன். ஊழியத்தில் என்னோடு கூட இருப்பவர்களுக்கு தெரியும். அவர்களுக்கும் அந்த அனுபவம் உண்டு. மூன்று நாட்கள் தண்ணீர் குடிக்காமல் உபவாசம் அப்படித்தான் ஊழியத்தில் நாட்கள் சென்றது. அந்த விதமான உபவாசிக்கிற நாட்களில் கூட எனக்கு பசி இருக்காது. ஆனால் அன்றைக்கு எனக்கு மிகவும் பசி. நான் வீட்டிற்கு வந்து என் மனைவியிடம் பசிக்கிறது சாப்பாடு சீக்கிரம் கொடு என்று கேட்ட போது அவள் என்னைப் பார்த்து நீங்கள் என்ன கொடுத்து விட்டு சென்றீர்கள். வீட்டில் தான் ஒன்றுமே இல்லையே நானும் உங்கள் மகளும் பட்டினியாய் தான் இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அவள் படுத்து கொண்டாள். ஆனால் எனக்கு தூக்கம் வரவில்லை. நான் போய் வெளியே பனிபடுகிற இடத்தில் முழங்கால்படியிட்டு ஆண்டவரை நோக்கி ஆண்டவரே நீர் தானே என்னை ஊழியத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தீர் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று சொன்னீரே ஆனால் நான் இன்றைக்கு பசியோடு இருக்கிறேன் என்று சொல்லி ஜெபித்து கொண்டிருந்த போது இரண்டு மணி இருக்கும். அப்பொழுது ஆண்டவர் சொன்னார் நீ போய் உன் மனைவியை எழுப்பிக் கொண்டு வா. நான் உன்னை ஆசீர்வதிக்க போகிறேன் என்று சொன்னார். இரவில் நன்றாக தூங்கி கொண்டிருக்கிற என் மனைவியை தட்டி எழுப்பி ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க போகிறார். வா என்று அழைத்துக்கொண்டு ஜெபிக்க வந்தேன். என் மனைவி தூக்கத்தில் ஒன்றும் புரியாமல் என்ன என்று கேட்டுக் கொண்டே வந்தாள். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க போகிறார். ஜெபிப்போம் என்று சொன்னவுடன் அவளும் என்னோடு சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தாள். நாங்கள் இருவரும் முழங்கால் படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்த போது எனக்குள்ளிருந்தே ஆண்டவர் என் குடும்பத்திற்கு வாக்குப்பண்ணினார். கன்மலையின் தேனினாலும் உச்சிதமான கோதுமையினாலும் நான் உன்னை திருப்தியாக்குவேன். இப்படி நிறைய வாக்குத்தத்தங்களை ஆண்டவர் கொடுத்தார். இப்போது நான் ஊழியத்திற்காக போகும் போது அதையெல்லாம் நினைப்பேன். ஒரு நாள் என்னுடைய வயிற்று பசிக்காக**

**நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆனால் இன்றைக்கு பாருங்கள் ஊழியத்தில் எத்தனையோ குடும்பங்களை போஷிக்கும்படியாக கர்த்தர் என்னை ஒரு கருவியாக நிறுத்தியிருக்கிறார்.**

*நம்முடைய வாழ்க்கையில் அநேகர் வருவார்கள் போவார்கள். பிள்ளைகள் வருவார்கள் ஆனால் பிள்ளைகளை எதிர்பார்த்து நாம் நிச்சயமாக வாழக் கூடாது நம்முடைய எதிர்பார்ப்பு எல்லாம் தேவனாகத்தான் இருக்க வேண்டும். கடைசி வரைக்கும் நம்மை நடத்துகிறவர் நம்முடைய ஆண்டவர். தாவீது அருமையாக சொல்லுகிறார் நான் தாழ்ச்சியடையேன் என் வாழ்வில் தாழ்வு என்பது வராது. ஏனென்றால் என் ஆண்டவர் என்னை நேசித்து நடத்துகிற ஒரு நல்ல மேய்ப்பன் அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து எங்கெல்லாம் ஆகாரம் இருக்கிறதோ அங்கே என்னைக்கொண்டு போவார். எங்கே என்னை கொண்டு போனால் நான் போஷிக்கப்படுவேனோ அங்கே என்னை வழி நடத்தி கொண்டு போவார். எந்த இடத்தில் நம்மை கொண்டு போனால் நன்மை உண்டாகும் எங்கு போனால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம் என்று அறிந்து அந்த இடத்தில் சரியாக ஆண்டவர் அவருடைய பிள்ளைகளை வழி நடத்தி கொண்டு போகக் கூடியவராய் இருக்கிறார். ஆண்டவர் அப்படி நடத்துவார். புல்லுள்ள இடத்தில் நம்மை மேய்த்து அவர் நடத்துவார்.*

**பிரியமானவர்களே, நன்றாக ஜெபிக்கக் கூடிய ஒரு விசுவாச குடும்பத்தார். தொழிலில் நஷ்டமடைந்து என்ன செய்வதென்றே தெரியாதபடிக்கு கலங்கினார்கள். பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுக்க முடியாத அளவிற்கு எல்லாமே முடங்கி போன ஒரு சூழ்நிலை. எல்லாமே வெறுமை. ஒன்றுமில்லாத சூழ்நிலை. அடுத்த வேளை சாப்பாட்டிற்கு வழியே இல்லை. அந்த சூழ்நிலையில் அவர்கள் ஆண்டவரை விசுவாசித்து ஜெபித்தார்கள். அந்த குடும்பத்தை**


WANTED

# முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய
வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 94869 19522.

**ஆண்டவர் இரட்சித்து அவருடைய பிள்ளையாக மாற்றினார். அந்த வேதனையான சூழ்நிலையிலிருந்து அவர்களுக்கு அழைப்பு கொடுத்து பெங்களூரு பட்டணத்திற்கு கொண்டு சென்றார். அடுத்த வேளை உணவிற்கே வழி இல்லாமல் அந்த பட்டணத்திற்கு சென்ற அவர் ஒரு கடலை மிட்டாய் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தார். ஒரு வேலையாளாக அந்த பட்டணத்திற்கு சென்ற அந்த குடும்பத்தை கர்த்தர் ஆசீர்வதித்து அநேக குடும்பங்களை போஷிக்கும்படியாக பெரிய எஜமானாக உயர்த்தினார். அநேக ஊழியங்களை ஆதரிக்கும்படிக்கும், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்படியாகவும் அவர்களை ஆசீர்வதித்தார்.**

*தேவன் நம்மை புல்லுள்ள இடங்களில் மேய்த்து எங்கு இந்த குடும்பத்தை கொண்டு சென்றால் போஷிக்கப்படுவார்கள் எங்கு இந்த குடும்பத்தை கொண்டு போய் வைத்தால் என் நாமத்தை மகிமைப்படுத்துவார்கள் என்று ஆண்டவர் அதை தீர்மானித்து நிறைவேற்றும்படியாக உங்களுக்கும் எனக்கும் நல்ல மேய்ப்பராக இருக்கிறார். ஆனால் நம்முடைய ஜெபம் என்பது எப்படி இருக்கிறது. நாகமான் ஜெபமாகத் தான் இருக்கிறது? நாகமான் எலிசாவைப் பார்த்து சொன்னான். நீர் வெளியே வந்து என் சரீரத்தில் கையை வைத்து ஜெபம் பண்ணி சுகமாக்கவீர் என்று பார்த்தால் நீர் யோர்தானில் போய் ஏழு தரம் மூழ்கும் என்று சொல்லுகிறீரே என்று கோபப்பட்டான். அவன் இருதயத்தின் சிந்தையெல்லாம் தேவ மனிதர் வந்து கையை வைத்து தடவி குஷ்டரோகத்தை சுகமாக்குவார் என்று நினைத்தான். ஆனால் தேவ திட்டம் யோர்தானில் போய் மூழ்கி அவனாகவே நேரடி சுகத்தைப் பெற்றுக்கொண்டு போக வேண்டும். நாகமானுக்கு சுகத்தை எலிசா அல்ல நானே கொடுப்பேன் என்று தேவன் சுகத்தைக் கொடுத்தார். ஆண்டவரே எங்கள் பிள்ளைகளை ஆசீர்வதியும் எங்கள் பிள்ளைகள் மூலமாக என்னை போஷியுங்கள், எங்களை இந்த வழியில் போஷியுங்கள் என்று அநேகர் ஆண்டவருக்கே சொல்லி கொடுப்பார்கள். ஆண்டவர் கடைசி வரைக்கும் உங்கள் கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார். வாழ்க்கையின் கடைசி பகுதியில் அடக்கம் என்று வந்தால் கூட அதற்கும் பணம் ஆயத்தம் பண்ணி வைத்து விட்டு தான் குழியை வெட்ட ஆண்டவர் வழி நடத்துவார். அவர் கடைசி வரைக்கும் நடத்துகிற ஆண்டவர். பிள்ளைகள் நம்மை போஷிக்க வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய நரை மயிர் மட்டும் நம்மை தாங்குவார். அதையெல்லாம் அறிந்த தாவீது தன்னுடைய வாழ்க்கையில் எல்லாவற்றையும் அனுபவித்து என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னை நடத்துகிறார் என்று சொல்லுகிறான். அமர்ந்த தண்ணீர் என்பது சமாதானம்*

ஆகும். மிகவும் முக்கியமான ஒரு காரியம் என்னவென்றால் ஒரு குடும்பத்திற்குள்ளே சமாதானம் வேண்டும். பணம் சமாதானத்தை கொண்டு வராது. பணம் வந்து விட்டால் சமாதானம் வரும் என்று அநேகர் நினைக்கிறோம். ஆண்டவர் கொடுக்கிற ஐசுவரியம் தான் சமாதானத்தை தரும். அதோடு கூட அவர் வேதனையைக் கூட்டார். வேதனையில்லாத ஆசீர்வாதம் என்பது அவரால் தான் தர முடியும். ஆகவே சமாதானமான பாதையிலே அவர் நம்மை நடத்தக் கூடியவராய் இருக்கிறார். அவர் என் மேய்ப்பராய் இருப்பதினால் என் வாழ்க்கையில் தாழ்ச்சி, வீழ்ச்சி, தரித்திரம் வராது என்று தாவீது சொல்லுகிறான்.

சமாதானமான பாதையில் அமர்ந்த தண்ணீரண்டையில் நம்மை நடத்துவார். ஆனால் ஆண்டவர் நம்முடைய மேய்ப்பராயிருந்தால்தான் இது நடக்கும். அநேகருடைய வாழ்க்கையில் ஆண்டவருக்கே புத்தி சொல்வார்கள். வேண்டாம் ஆண்டவரே இது அப்படியல்ல அது இப்படித்தான் செய்ய வேண்டும் என்று புத்தி சொல்வார்கள். ஆனால், ஆண்டவர் எங்கு கையை காட்டுகிறாரோ அங்கே போக வேண்டும். மேகஸ்தம்பத்தின் அசைவை நிதானித்து சரியாக அறிந்து நாம் அந்த பாதையில் கடந்து செல்ல வேண்டும். பிள்ளைகளுக்கு திருமணம், வீடு கட்டுவது போன்ற தேவைகள் வரும்போது மேக ஸ்தம்பம் அசைகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆண்டவர் அசையாமல் வழிகாட்டாமல் நீங்களாகசென்றால் பிள்ளைகளை கொண்டு போய் நீங்களே படு குழிக்குள் தள்ளி விட்டு வந்து விடுவீர்கள். மறுபடியும் பிள்ளைகளை மீட்டெடுக்க முடியாது. ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையில் அசைவாடுகிறாரா என்பதை நிதானித்து அறிய வேண்டும். ஏனென்றால் ஆடுகள் மேயப்பனுக்கு பின்னாக போகும். ***...என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்கு பின் செல்லுகிறது. – யோவான் 10:27*** என்று ஆண்டவர் தெளிவாக சொல்லுகிறார். ஆடுகளுக்கு தனது மேய்ப்பனை நன்றாகத் தெரியும். ஆடுகளை மேய்ச்சலுக்கு விடும்போது ஆயிரம் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தாலும் மேய்ப்பன் ஒரு சத்தம் கொடுத்தால் உடனே ஆடுகள் அவனுக்கு பின்னாகச் செல்லும் முன்னால் அல்ல. சில ஆடுகள் முன்னால் செல்லும். ஆண்டவர்தான் நமக்கு முன்னாக போக வேண்டும். தாவீதைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார் ***...முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ அப்பொழுது பெலிஸ்தரின் பாளையத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாக புறப்பட்டிருப்பார் என்றார். – 2 சாமுவேல் 5:24*** நாம் அவசரப்பட்டு முன்பாக

போக கூடாது. காலத்தையும் நேரத்தையும் நிதானிக்க வேண்டும். நல்ல ஒரு மேய்ப்பனுக்கு கீழ் இருக்கக் கூடிய ஆடுகள் மேய்ப்பனையே பார்த்துக்கொண்டிருக்கும். அவன் அசைகிறானா அவன் போகிறானா அவன் கூப்பிடுகிறானா என்று பார்க்கும். அப்படி நாம் மேய்ப்பனின் சத்தத்தை கேட்கிற ஆடுகளாக மாற வேண்டும்.

மேய்ப்பனுடைய சத்தம் எந்த விதத்தில் வரும். ஒருவேளை பலிபீடத்திலிருந்து வரும். வேதத்தை திறக்கும் போது வரும். சில நேரம் துக்கத்தில் இருக்கும் போது ஒரு பாடல் மூலமாக வரும். பாடல் மூலமாக கூட ஆண்டவர் உங்களிடம் பேசி உங்கள் பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வருவார். இல்லையென்றால் இராக்கால தரிசனத்தில் வரும். அப்படியில்லையென்றால் ஏதோ ஒரு விதத்தில் ஆண்டவர் கர்த்தருடைய மனிதரை நம்முடைய வீட்டிற்கு அழைத்து வருவார். வீட்டிற்கு கொண்டு வருவது மாத்திரமல்ல அவர் சொல்லும் வார்ததை அது கர்த்தருடைய வார்த்தையாக இருக்கும் ***...நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும்,இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது இவர்களை பட்சிக்கும். – எரேமியா 5:14*** இது மேய்ப்பனுடைய சத்தம் தானா இது கர்த்தருடைய வார்த்தை தானா என்பதை எப்படி அறிய முடியும்? கர்த்தருடைய வார்த்தையாக இருந்தால் சொல்லுகிறவனும் அக்கினியாகத்தான் சொல்லுவான். அதை கேட்கும் போதும் நம்முடைய இருதயத்தில் வார்த்தை விழும்போதும் நெருப்பை பற்ற வைப்பது போல இருக்கும். அப்போது அது தேவனுடைய சத்தம் என்பதை நிதானித்து அறிந்து கொள்ள முடியும். மேய்ப்பனையே எதிர்பார்த்து காத்துகொண்டிருப்போமானால் சரியான நேரத்தில் ஆண்டவர் மிகவும் சரியாக, தெளிவாக, நேர்த்தியாக ஆண்டவர் நம்மை வழிநடத்துவார்.

**ஒரு சகோதரி தன்னுடைய திருமணத்திற்காக தொடர்ந்து ஜெபம் பண்ணி கொண்டிருந்தார்களாம். அவர்கள் ஜெபம் பண்ணும்போது மிகவும் துக்கத்தோடு ஜெபித்து கொண்டிருந்திருக்கிறார்கள். ஆண்டவர் அவர்களுக்கு தரிசனமாகி அவர்கள் செல்லும் ஆலயத்தில் நன்றாக அழகான புது செருப்பு ஒரே ஒரு செருப்பு மாத்திரம் ஆலயத்தின் வாசற்படியில் இருந்ததாம். அந்த தரிசனத்தை பெரிதாக எண்ணாமல் திரும்பவும் அவர்கள் ஜெபம் பண்ணுகிறார்கள். அப்போது காத்திருக்கும்படியாக ஆண்டவர் உணர்த்துகிறார். பின்பு ஒரு வரன் வரும் போது மிகவும் துக்கத்தோடே ஜெபிக்கிறார்கள். ஆண்டவர் தரிசனமாகி அதே போல அதே ஆலயத்தில் ஒரே ஒரு செருப்பு மாத்திரம் இருந்ததை காண்பித்து ஆண்டவர் இது என் வழி இல்லை என்று சொன்னார். திரும்ப அப்படியே அடுத்த வரன்**

**வரும் போது ஆண்டவரே இது உங்களுக்கு சித்தமா இல்லையா என்று ஜெபம் பண்ணும்போது ஆண்டவர் தரிசனம் கொடுத்து முதலில் எந்த செருப்பை காட்டினாரோ அதற்கான மற்றொரு ஜோடி செருப்பை அவர்கள் போகின்ற தேவாலயத்திற்கு முன்னால் இருப்பதாக காண்பித்து இதுதான் நான் உனக்கு ஏற்படுத்தின துணை என்று சொல்லி திருமண வாழ்க்கையை ஆசீர்வதித்தார்.**

*ஒவ்வொருவரும் அறியதக்கதாக அவர்களுடைய அறிவுக்கு ஏற்றபடி நல்ல மேய்ப்பர் தரிசனத்தினாலும் சொப்பனத்தினாலும் அல்லது வேதவசனத்தினாலும் அல்லது ஊழியர் மூலமாய் பலிபீடத்திலிருந்தும் எந்த விதத்திலாகிலும் அவர் தம்முடைய ஆடுகளை தம்முடைய பிள்ளைகளை வழிநடத்துபடியாக அவருடைய சத்தத்தை கொண்டுவரக்கூடியவராக இருக்கிறார். அவைகளை ஆண்டவர் சமாதானமான பாதையிலே நடத்துகிறார்.*

*அடுத்தபடியாக அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நம்முடைய ஆத்துமா அநேக நேரம் சோர்ந்து போய் விடுகிறது. நமக்குள்ளே இருக்கும் ஆத்துமா மிகவும் முக்கியமானது நம்முடைய சரீரத்தில் ஆவி ஆத்துமா மிக முக்கியமாக கருதப்படுகிறது அது இல்லையென்றால் உயிர் இல்லாத பிணம்தான். ஆத்துமா எப்போதும் சிந்தித்து கொண்டே இருக்கக்கூடியதாக இருக்கிறது. இரவில் கண் விழித்தால்கூட சிந்தனை மண்டலம் செயல்பட ஆரம்பித்து விடுகிறது. தூக்கம் கெட்டால் கூட சிந்தனை மண்டலம் செயல்பட ஆரம்பிக்கிறது. கண்கள் எதை எல்லாம் பார்க்கிறதோ அதை எல்லாம் சிந்தனை செய்து கொண்டிருக்கிறது.*

**ஊழியத்திற்காக அழைக்கப்பட்ட எனக்கு ஆரம்ப காலத்தில் ஊழியத்தின் நிமித்தமாக மன சோர்வுண்டாயிற்று. அப்போது உபவாசம் பண்ணி குறிப்பிட்ட ஒரு கிராமத்தின் வெளிப்புறத்தில் உள்ள தோட்டத்தில் போய் ஜெபம் பண்ண சென்றேன். அந்த தோட்டத்தில் நான் ஜெபம் பண்ணிக்கொண்டே இருந்தேன். சாயங்காலம் வரைக்கும் ஜெபம் செய்து கொண்டேயிருந்தேன். எந்த ஒரு தேவ சத்தமும் இல்லை. அப்பொழுது நான் கவலையோடு கூட அந்தத் தோட்டத்திலே வானத்தைப் பார்த்தபடியே படுத்துக்கொண்டேன். ஒரு பக்கம் ஆண்டவர் மீது எனக்கு கோபம் இருந்தது. அப்பொழுது அந்தத் தோட்டத்தின் அருகாமையிலுள்ள வீட்டில் தொலைக்காட்சியா அல்லது வானொலியா என்று தெரியவில்லை அந்த நிகழ்ச்சியில் கதை ஒன்று சொல்லப்படுகிறது. அந்த கதை என் காதில் விழுந்தது. குறிப்பிட்ட கிராமத்திலிருக்கிற**

ஒருவன் எப்போதும் ஜெபிக்கும் போது ஆண்டவரே எனக்கு மிகவும் பாடுகள் உள்ளது. என்னால் தாங்கமுடியவில்லை. அதினால் இந்த பாடுகளில் இருந்து என்னை விடுதலையாக்கி விடும் என்று சொல்லி கொண்டேயிருந்தானாம். ஆண்டவர் அந்த கிராமத்தை உற்று கவனித்துப் பார்த்தால் அந்த கிராமத்தில் உள்ள அனைவருமே எங்களுக்கு பாடுகள் அதிகம் எங்களால் தாங்க முடியவில்லை. ஏதாவது வழி செய்யுங்கள் என்று ஜெபிக்கின்றனர். அப்போது ஒரு நாள் அந்த கிராம மக்களை பார்த்து ஆண்டவர் சொன்னார். நீங்கள் நாளைக்கு சரியாக மாலை ஏழு மணிக்கு ஆலயத்தில் மணி அடிக்கும் அப்போது நீங்கள் அனைவரும் உங்கள் பாடுகளை மூட்டை முடிச்சுகளாக கட்டி தூக்கி கொண்டு வாருங்கள். மணி அடித்தபின்பு மறுபடியும் பத்து நிமிடம் மின்சாரம் தடை செய்யப்படும் அப்போது நீங்கள் கொண்டு வந்த உங்கள் பாடுகளை வேறு ஒருவருக்கு மாற்றி கொடுக்கலாம் என்று சொன்னார். அப்போது மிகவும் பாடு பாடு என்று சொன்ன அந்த மனிதன் மூட்டையில் தனது பாடுகளை கட்டிக்கொண்டு ஆலயத்தில் முதல் மனிதனாக வந்து நின்று விட்டான். அவன் நின்று பார்த்த போது எல்லாரும் ஏழு பத்து என்று சாக்குகளில் தங்களது பாடுகளை இழுக்க முடியாமல் இழுத்து கொண்டு வந்தார்களாம். இவன் பார்த்து கொண்டேயிருந்தானாம். ஐயோ நம்முடைய பாடு கொஞ் சமாகத்தான் இருக்கிறது. ஏழு எட்டு என்றெல்லாம் சாக்கு பைகள் வருகிறதே என்று பார்த்துக் கொண்டிருந்த போது ஒருவன் மட்டும் கையை வீசிக்கொண்டு வந்திருக்கிறான். அவனைப் பார்த்து உனக்கு பாடுகள் ஏதும் இல்லையா என்று கேட்ட போது அவனோ அதையெல்லாம் கையில் கொண்டு வர முடியாது அவைகளெல்லாம் லாரியில் வருகிறது என்று சொல்லியிருக்கிறான். இவன் இதைக் கேட்டு திகைத்துப் போய் நின்றான். அதைப் போல மணி அடித்து மின்சாரம் தடை செய்யப்பட்டது. மறுபடியும் மணி அடித்த போது மின்சாரம் வந்தது. விளக்குகள் எறிந்தது அனைவரும் அவரவர் கொண்டு வந்த அந்த மூட்டைகளை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தார்களாம். ஆண்டவர் அவர்களைப் பார்த்து உங்கள் பாடுகளை மாற்றவில்லையா என்று கேட்ட போது பழக்கபட்ட பாடே எங்களை இந்த பாடு படுத்துது நாங்கள் பழக்கப்படாத பாடு எங்களுக்கு சரிவராது எங்களுக்கு உள்ள பாடுகளே போதும் என்று சொல்லி விட்டு அனைவரும் கலைந்து சென்றார்களாம். இந்த கதை அருகிலுள்ள இடத்திலிருந்து என் காதுகளில் வந்து விழுந்தது. நான் காலையில் இருந்து பாடு பாடு என்று தான் ஆண்டவரிடத்தில் மன்றாடி கொண்டிருக்கிறேன். இதைக் கேட்ட போது ஒப்புக்கொடுத்து ஆண்டவரே என்னை மன்னித்துவிடுங்கள்.

**நீங்கள் கொடுத்த பாடுகளை சுமக்க எனக்கு பெலன் தாரும் என்று ஜெபித்துவிட்டு வீட்டிற்கு சென்றேன்.**

*பிரியமானவர்களே, ஆண்டவர் சுமப்பதற்கரிய பாரத்தையல்ல. சுமப்பதற்கு ஏதுவான பாரத்தைகொடுத்து அவரே நம்மை நேர்த்தியாக ஒவ்வொரு நேரமும் சரியாக ஆலோசனை கொடுத்து அற்புதமாக நடத்துகிறார். எந்தவிதத்திலாகிலும் தேவனுடைய வார்த்தை உங்களை நோக்கி நீங்கள் காத்திருக்கும் போது வந்துவிடும். எந்த வழியிலாவது ஆண்டவர் பேசுவார். ஏனென்றால் அவர் நம்மை உற்றுக் கவனிக்கிறார்.* ***தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. – 2 நாளா. 16:9***

**அவர் என் ஆத்துமாவைத் தேற்றி,தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். – சங்கீதம் 23:3** *எந்த இடத்தில் வைத்தால் நாம் பரிசுத்தமாக இருப்போம் என்பது அவருக்குத் தெரியும். எந்த இடத்தில் கொண்டு போய் நிறுத்தினால் நாம் பாவம் இல்லாமல் இருப்போம் என்று அறிந்து அந்த இடத்திற்கு நம்மை நடத்தி கொண்டு போவார். அவரே நமக்கு நீதியும் இரட்சிப்பும் பரிசுத்தமுமானார். எங்கு என் பிள்ளையை வைத்தால் நீதியின் பாதையில் நடத்த முடியும் என்பது அவருக்கு தெரியும். ஒரு நீதிமானாக, உத்தமனாக நம்மை ஆண்டவர் நிறுத்துகிறார். எதுவாயிருந்தாலும் ஆண்டவரே இது உமக்கு சித்தமா என்பதை அறிந்து நாம் அதை அவரிடத்தில் காத்திருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.*

***நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னை தேற்றும். சங்கீதம் 23:4***

*உமது கோலும் தடியும் என்னை தேற்றும். ஆங்கில வேதாகமத்தில் கோல் என்றால் இரும்பு (ROD) என்று இருக்கிறது. கோல் என்பது அதிகாரம் அந்த கோல் இயேசு என்ற நாமம். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வரும்போது வனாந்தரத்திலே வழி தெரியாது நின்றார்கள்.பின்னே பார்வோனின் சேனை முன்னே செங்கடல் மோசே தேவ சமுகத்தில் போய் அழுதான். நீ என்னிடத்தில் வந்து முறையிடுகிறது என்ன உன் கோலை எடுத்து சமுத்திரத்தை பிளந்து விடு என்றார். அவன் போய் கோலை எடுத்து நீட்டினான். சமுத்திரம் இரண்டாக பிளந்தது.*

**நமது தலைமை அலுவலக இடத்தில் நடைபெறும் எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு சமையல் செய்வதற்காக வரும் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் சமைக்க வரவில்லை**

**என்று சொல்லிவிட்டார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் ஒரே கலக்கமாக இருந்தது. சமைக்கும் அம்மா சும்மா வந்து உட்கார்ந்து அவர்கள் சொல்வதை வேறு யாராவது வைத்து சமைத்து விடலாம் என்று எண்ணிய போது அதற்கும் முடியாது என்றார். அவர்கள் கைகள் வேலை செய்ய முடியாத அளவிற்கு கட்டப்பட்ட நிலையில் இருந்தார்கள். இதை நான் விசாரித்துக்கொண்டு இருக்கும் போது சமைக்கும் அம்மாவை அவரது கணவர் கூட்டிக்கொண்டு வந்து நிற்கிறார். அண்ணன் என் மனைவிக்கு ஜெபம் பண்ணி விடுங்கள் என்று சொன்ன போது ஜெபித்த வேளையில் அசுத்த ஆவி அந்த அம்மாவை அலைக்கழித்தது. இயேசு என்ற நாமத்தில் உள்ள அதிகாரத்தோடு பிசாசே நாளைக்கு இவர்கள் சமைக்க வேண்டும். இயேசுவின் நாமத்தினால் இவர்களை விட்டு வெளியே போ என்று ஜெபித்த போது அவர்களை விட்டு வெளியே சென்றது. எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு வந்து நல்ல பெலத்துடன் சமையல் வேலை செய்து முடித்தார்கள்.**

*இயேசு என்கிற நாமம் எவ்வளவு பெரிய மகத்துவமுள்ள நாமம் பாருங்கள்! அந்த நாமத்தில் நாம் ஜெபிக்கும் போது வானத்தை அல்ல அந்தகாரத்தை கிழித்துக்கொண்டு ஜெபம் மேலே செல்கிறது. அது தான் இயேசுவின் நாமம். இந்த அதிகாரம் அன்றைக்கு தானியேலுக்கு இல்லை. அவன் உபவாசித்து 21 நாட்கள் காத்துக்கொண்டிருந்தான். இப்பொழுதெல்லாம் ஒரு நிமிடம் கூட காத்திருக்க வேண்டாம். இயேசு என்ற நாமத்தை பயன்படுத்தி உடனே தடைகளை உடைத்து நாம் போய்க்கொண்டிருக்கலாம். தடி என்பது ஆங்கிலத்தில்* STAFF *என்று இருக்கிறது. அப்படியென்றால் தாவீது தேவதூதர்களை குறித்து சொல்லுகிறார். அப்படி ஒரு மகத்துவமான பாதுகாப்பை நம் வாழ்க்கையில் தருகிறார்.*

**ஒரு முறை நான் ஊழியத்திற்காக சென்று விட்டு திரும்பி வரும் போது வாடகைக்காரை ஆயத்தம் செய்து அதில் அமர்ந்து ஜெபித்து கொண்டே வந்து கொண்டிருந்தேன். திடீரென்று பின்னால் வந்த கார் நான் போய்க்கொண்டிருக்கும் வாகனத்தின் பின் பகுதியினை**


காணத்தவறாதீர்கள்!

நம்பிக்கை TELEVISION

நம்பிக்கை தொலைக்காட்சியில்...

# வேதமே வெளிச்சம்

என்ற நிகழ்ச்சி ஒவ்வொரு வியாழக்கிழமையும் காலை 7 மணி முதல் 7.30 மணி வரை ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

இந்நிகழ்ச்சியை உங்கள் அருமையானவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

**வந்து இடித்தது. நான் வந்த காரில் இருந்த டிரைவர் அப்படியே காரின் முன் பகுதியில் மோதி ஐயோ அம்மா என்று சத்தமிட்டார். எனக்கு எந்த வித சேதமும் இல்லை. நான் என்ன நடந்தது என்று பார்ப்பதற்காக இறங்கி வெளியே வந்து பார்த்தால் நான் வந்த காரின் பின்பகுதி அப்பளம் போல நொறுங்கிற்று. வண்டி பாகங்கள் சாலையில் உடைந்து விழுந்து கிடந்தது. வந்து மோதின காரைப் பார்த்தால் அப்பளம் போல நொறுங்கி அதில் இருந்த டிரைவர் வெளியே வர முடியாமல் இருந்தார். அநேகர் வந்து அந்த வண்டியை சரிசெய்து அந்த டிரைவரை வெளியே எடுத்தார்கள். எனக்கு பேருந்து ஏறுவதற்கு செல்ல நேரம் ஆகி விட்டது. நான் எனது உடன் ஊழியரை தொடர்பு கொண்ட போது அவர் அந்த இடத்திற்கு வந்து என்னை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றார். அந்த இடத்தில் நடந்த விபத்தைப் பார்த்து விட்டு அண்ணா உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே என்று கேட்ட போது ஆண்டவர் தான் என்னை பாதுகாத்தார் என்று நான் பதிலளித்தேன். ஒரு சிறிய கீறல் கூட எனக்கு ஏற்படவில்லை.**

*இன்றைக்கு உங்கள் தலையிலிருந்து நான்கு மயிர் கீழே விழ வேண்டுமென்று பரலோகம் தீர்மானம் செய்தால்தான் அந்த நான்கு மயிரும் கீழே விழும். இல்லையென்றால் அதுவும் விழாது. அந்த அளவிற்கு பெரிய பாதுகாப்பை நமக்கு தந்திருக்கிறார். உங்கள் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார். அவ்வளவு ஒரு மகத்துவமான தேவன் அவர்.* ***இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். – மத்தேயு 18:10*** *இரண்டு இரண்டு தூதர்கள் உங்களோடு எப்போதும் இருப்பார்கள். ஒரு தூதன் மேலே சென்றாலும் மற்றொரு தூதன் காத்துக்கொண்டிருப்பான். ஒரு தூதன் இலட்சத்து எண்பதினாயிரம் பேரை சங்கரித்து போடுகிறான். அவ்வளவு பெரிய பராக்கிரமசாலிகளை கர்த்தர் நம் பக்கத்தில் வைத்திருக்கிறார். நமக்கு எவ்வளவு பெரிய பாதுகாப்பு இருக்கிறது. நீர் அவனையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் வேலி அடைத்து காக்கவில்லையோ என்று யோபுவை குறித்து சாத்தான் சொல்வதை அறிகிறோம். உங்களுக்கு உள்ள எல்லாமே ஆண்டவருக்கு தெரியும். நீங்கள் பயன்படுத்தும் அனைத்தையும் ஆண்டவர் அருமையாக பாதுகாத்து வைத்திருக்கிறார். ஆனால் நாம், சாத்தான் கிரியையாக, மந்திரமாக இருக்குமா என்று இல்லாததையெல்லாம் நினைத்து கொண்டிருக்கிறோம். ஆண்டவர் கொடுத்திருக்கிற பாதுகாப்பு எல்லாவற்றையும் விட மிகவும் மேலான பாதுகாப்பை தந்திருக்கிறார். அப்படி கர்த்தர் உங்களையும் என்னையும் பாதுகாக்கக் கூடியவராய் இருக்கிறார். அவருடைய கோலும் தடியும் நம்மை தேற்றும் பாதுகாக்கும்.*



# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம்
### கோட்பாடு பணித்தளம்

**ஜெபக்குறிப்புகள்:**

- ஜீராகாவ் கிராமத்தில் ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது.
- ரொய்னு என்பவர் குடும்பமாக ஆராதனைக்கு புதிதாக வருகிறார்கள். இவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.
- மூன்று சிறுமிகள் ஆராதனைக்கு வருகின்றனர். மேலும் இவர்களது பெற்றோர் சபைக்கு வந்தால் சமாதிக்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்று கூறி பயப்படுகிறார்கள். இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- பிபேக் என்ற சிறுவன் காய்ச்சலிலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.
- ஒரு வயதானவர் ஆராதனை நேரத்தில் மிகவும் சத்தம் போட்டு ஆராதனை நடத்தக் கூடாது என்று கூறுகின்றார். இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- பத்ராஸ் என்பவர் குடும்பமாக கர்த்தருக்குள் (ஜெபத்திலும், வேத வசனம் வாசிப்பதிலும்) அதிகமாக நேரத்தை செலவிடும்படியாக ஜெபியுங்கள்.
- ஆம்பாகுடா கிராம்தில் விசுவாசிகள் ஆராதனைக்கு வரும்படியாக விரும்புவதில்லை. இவர்கள் ஞாயிற்று கிழமையானால் ஆராதனைக்கு போக வேண்டும் என்ற வாஞ்சை உருவாக ஜெபியுங்கள்.
- திலிப் என்ற சகோதரன் ஆராதனைக்கு வரும்படியாக விரும்புகிறார். ஆனால் அவனது தகப்பனார் நாம்

இந்து என்று கூறி தடை செய்கிறார். இந்நிலைமை மாற ஜெபியுங்கள்.

- ஆம்பாகுடா கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- பட்னாரு என்ற கிராமத்தில் ஒரு குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர். இங்கு மொத்தம் 150 குடும்பம் உள்ளது. இந்த ஒரு குடும்பத்தினருக்கு எதிர்ப்பு தெரிவித்து நீ கிறிஸ்தவத்தை விட்டு விடுஇல்லையெனில் அடித்து கொன்று விடுவோம் என்று கூறி வருகின்றனர். இந்த சூழ்நிலை மாற ஜெபியுங்கள்.
- பிங்கிலி, சிரிஸி ஆகிய கிராமங்களில் அதிகமாக மந்திரவாதம் செய்கின்றனர். கிறிஸ்தவர்களுக்கு எதிராக எப்போதும் பூஜா செய்து வருகின்றனர். இந்நிலைமை மாறிட ஜெபியுங்கள். மேலும் வீடு வீடாக சென்று பணம் கேட்கின்றனர். கொடுக்காவிட்டால் கிராமத்தை விட்டு வெளியேற்றிவிடுவோம் என்று கூறுகின்றார்கள். இதற்காக ஜெபியுங்கள்.

## கோராபுட் மாவட்டம் படுவா பணித்தளம்

**ஜெபக்குறிப்புகள்:**

- பங்கி ஹந்தால் என்ற சகோதரன் ஒரு இருசக்கர வாகனம் வாங்க 25000 ரூபாய் முன் பணம் கொடுத்திருந்தார். நான்கு மாதங்களாகியும் பணம் திரும்ப பெற முடியவில்லை. ஆலயத்தில் இதற்காக நாங்கள் (சபை விசுவாசிகள்) ஒரு மனமாக ஜெபித்தோம். முன்பணம் வாங்கிய நபர் பணத்தை திரும்ப கொடுத்து விட்டார். தேவனுக்கே மகிமை.
- ஜெரிமியா என்பவரது பணம் 5000 காணாமல் போயிருந்தது. ஜெபம் செய்தோம். பணத்தை எடுத்தவன் ஊர் மக்களுக்கு முன்பாக பணத்தை கொடுத்துவிட்டு மன்னிப்பு கேட்டான். தேவனுக்கே மகிமை! பணத்தை எடுத்தவன் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- பவுல் ஹந்தால் என்பவரின் மகள் பள்ளி விடுதியில் தங்கி படிக்காமல் வீட்டிற்கு வந்து விடுகிறாள். (பெயர் அமி ஹந்தால் வயது 7) இவளது பெற்றோர் தனது மகள் படிக்க விடாதபடிக்கு பில்லிசூனியம் செய்துள்ளனர் என்று கூறுகின்றனா. இந்த சிறுமியின் படிப்புக்காக ஜெபியுங்கள்.
- ராஜீ என்பவர் மீது உள்ள வழக்கு முடிய ஜெபியுங்கள்.
- கொமுலு கிலோ, சதா ஹந்தால், பிஜய் கிலோ, சுந்தரி கிலோ, சுமி கிலோ இவர்கள் ஞானஸ்நானம் எடுக்க ஒப்புக்கொடுத்துள்ளனர். இவர்கள் ஆசீர்வதிக்கப்படவும் கர்த்தருக்குள்நிலைத்திருக்கவும் ஜெபியுங்கள்.

## சுவிசேஷ ஊழியம்

**கொலுரு பஞ்சாயத்து:**

- ஹம்டிங், டொமொங்கொ, பிரதான்புட், குடா, தோராகுடா, கெமேல்புட், மாலிகுடா, பாலிகுடா, பொடொங்கொ, கொடாப்புட், பாசிங், ஜோடிப்புட், போடிப்புட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இக்கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

**ஜொக்கிபாரி:**

- இக்கிராமத்தில் ஆலயம் கட்ட இடம் தேவைப்படுகிறது. இதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## மல்கன்கிரி மாவட்டம் சித்ரகோண்டா பணித்தளம்

**ஜெபக்குறிப்புகள்:**

- எங்களது ஜொடாஆம் பஞ் சாயத்தில் முற்றிலும் சுவிசேஷம் கிடையாது. மிகவும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இவர்கள் எப்போதும் ராம் பூஜா செய்து வருகின்றனர். தொனொ, ராம் சுந்தரோ கங்காதார் ஆகியவர்கள் மிகவும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்;.
- ஜொந்து ராய் கிராமத்தின் தலைவர் ஜெயராம்.
- சிநதிகுடா கிராமத்தலைவர் ஜொகிந்தோரொ , நந்தோ முதுலி.
- பியான்புடி கிராமத்தின் தலைவர் பல்ராம் சிஸா தூண்ட்ரி, ஜெயராம்.
- இவர்கள் தலைமையில் கிராமத்தினர் மிகுந்த எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நான் எப்போதாவது சுவிசேஷம் அறிவிக்கச் சென்றால் எதிர்ப்பு தெரிவித்து திட்டுகின்றனர். இவர்களது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.
- குஜருகுடா கிராமத்தில் பொரஸ் கிலோ என்பவர் சுவிசேஷத்திற்கு மிகவும் எதிர்ப்பு தெரிவிக்கின்றார். இவர்களது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.
- சிந்திப்புட் கிராமத்தின் முக்கிய தலைவர் பீமோ. அர்ஜீன், முக்குந்தா ,இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- பொஜங் கிராமத்தில் ஒரு குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்தார்.
- இவர்களுக்கு மிகுந்த எதிர்ப்பு தெரிவித்து மீண்டும் இந்துவாக மாற்றிவிட்டனர்.
- இக்கிராமத் தலைவர்கள் பெயர் பங்குரு,தாசோ,குண்டு இவர்கள் இயேசுவை ஏற்றுகொள்ள ஜெபியுங்கள்.
- உப்பாசேறு கிராமத்தில் ஒரு குடும்பத்தினரை ஊர் கூட்டம் போட்டு பேசி, இவரை மிரட்டி மீண்டும் இந்துவாக மாற்றியுள்ளானர்.
- இவ்வளவு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இராணா என்ற சமூகத்தினர். இவர்களின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனு வாபஸ் முடிந்து இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி 39 தொகுதிகளில் 950 பேர் போட்டியிடுகின்றனர்.
2. டெல்லியில் ரூ.6 லட்சத்துக்கு குழந்தைகளை போலி ஆவணங்கள் மூலம் சட்டவிரோதமாக விற்றதாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் உள்பட 7 பேரை சி.பி.ஐ. அதிகாரிகள் கைது செய்தனர்.
3. சத்தீஷ்காரில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 10 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பயங்கர வெடிபொருட்கள், ஆயுதங்கள் சிக்கின.
4. வட அமெரிக்க நாடான மெக்சிகோவின் பல்வேறு இடங்களில் காட்டுத்தீ பரவி வருகிறது. அதன்படி மொத்தம் 120 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டதாக பதிவாகி உள்ளது. இந்த காட்டுத்தீ காரணமாக இதுவரை அங்கு சுமார் 8 ஆயிரம் ஹெக்டேர் வனப்பகுதிகள் எரிந்து நாசமாகின.
5. துருக்கியில் கேளிக்கை விடுதியில் தீப்பிடித்து 29 பேர் உடல் கருகி செத்தனர்.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**
Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஓசூர் | – 94869 07831 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.









ஒடிசா மாநிலம் கோராபுட், மல்கன்கிரி, இராயகடா, நபரங்கபூர் ஆகிய மாவட்டங்களில் நமது சுவிசேஷ குழுவினர்...



Registered Newspaper RNI No. TNTAM/2003/15637, Postal Registration No.: TTN/10/2024-2026.
WPP No.: TN/WPP – 192/SR/2024-2026
Date of publication on 10.04.2024. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

முதலூரில்...

# எழுப்புதல் உபவாச ஜெபம்

**நாள்:**

**04.05.2024**
சனிக்கிழமை
காலை 10 மணி

**இடம்:**

எழுப்புதல் கூடாரம்,
முதலூர்.





**தேவ செய்தியாளர்கள்:**

சகோ.
## T. ஆசீர் ஞானராஜ்

Dr.
## R. அன்புராஜன்
இயேசு விடுவிக்கிறார்

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**